# மிருதங்க அரங்கேற்ற

## விழாமலர்



29 - 09 - 1991

வெளியீடு

இணுவில் கந்தசுவாமி கோவில்

இளந்தொண்டர் சபை.

உ

மிருதங்க வித்துவான்

க. ப. சின்னராசா அவர்களின்

மாணவன்

செல்வன் க. கஜன் அவர்களின்

# மிருதங்க அரங்கேற்ற விழாமலர்

29 - 09 - 1991

வெளியீடு,
இணுவில் கந்தசுவாமி கோவில்
இளந்தொண்டர் சபை.

க. ஜெயேந்திரன்
"சங்கை"
இசைப் பயிற்சி நிலையம்
சங்கானை



க. ப. சின்னராசா அவர்கள்



செல்வன். க. கஜன்

# குருவின் ஆசியுரை

திறமை மிக்க இசைக்கலைஞர் வாழும் நகர் இணுவையாகும். இசையாளரும், லய ஞானிகளும் வளர்ந்து வரும் பதி இணுவைப்பதி. இற்றைக்கு பத்தொன்பது வருடங்களுக்கு முன் எனது மாணவனும் ஆசிரியருமாகிய திரு - சங்கரசிவத்தின் மிருதங்க அரங்கேற்றம் எனது மதிப்புக்குரிய குருநாதர் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது இதன்பின் பல மாணவர்கள் உருவாகியுள்ளார்கள். உருவாகியும் வருகிறார்கள் இக்கலை வளர்ச்சிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வரும் "இளந் தொண்டர்" சபைக்கு எனது பாராட்டையும் நன்றிகளையும் முதற் கண் தெரிவித்து கொள்ள விரும்புகின்றேன்.

இன்று அரங்கில் அறிமுகமாக இருக்கும் சிறுவன் செல்வன் கஜன் அவரின் வாமனரூபம் வயது 15 வகுப்பு ஒன்பது மிருதங்கம் 3 ம் ஆண்டிற்குத் தோற்றியுள்ளார். நான்காம் ஆண்டு படித்துள்ளார். இவரின் ஆரம்பகுரு ஆசிரியரும், எனது மாணவரும் ஆகிய திரு சி. அருணகிரிவாசன் அவர்களாகும் கஜன் பண்ணிசையும், பாடலிசையும் பயின்று வருகின்றார். இவருக்கு பண்ணிசையிலுள்ள திறமையை நாம் அறியவேண்டுமாயின் இவர் பெற்றுள்ள தங்கப்பதக்கங்களே சான்றாகும் இசைமாதாவின் ஆசியுடன் பிதாலயத்தின் கடாட்சமும் தனக்கு உண்டு என்பதை இன்று உங்கள் முன் நிருபிக்க இருக்கின்றார். அமைதியான குணம், அன்பான பண்பு, அடக்கமான வாசிப்பு, குருபக்தி, கிரகிக்கும் தன்மைகள் நிறைய இவரிடம் காணலாம்.

சுருதி - லயம் இரண்டும் இவரில் அமைந்திருப்பதால் இவர் சிறந்த கலைஞனாக பொலிவுறுவர் என்பது வெள்ளிடை மலையாகும் என்றும் சிறந்த வித்துவானாக வளர வேண்டி எல்லாம் வல்ல இணுவைக் கந்தன் துணைகொண்டு எனது ஆசிகளை மனமுவந்து வழங்குகின்றேன்.

சுன்னாகம்
3 - 9 - 91

இங்கனம்
மிருதங்க கலா வித்தகர்
க. ப. சின்னராசா
முன்னைநாள் கோ. அ. ப. கலாசாலை
மிருதங்க விரிவுரையாளர்

## இளந்தொண்டர் சபை
## முன்னைநாள் மிருதங்க ஆசிரியரின்
## ஆசியுரை

"மிருதங்கக்கேள் உங்களை வரட்டாம்" எனது தந்தைக்குரிய கடமைகள் சிலவற்றை செய்து கொண்டிருக்கும் போது செல்வன் க.கஜன் ஓடிவந்து என்னிடம் கூறுகிறார். தொடர்ந்தாற் போல் திரு. ந. பரமேஸ்வரன் வருகின்றார் விடயத்தை வினவிய போது செல்வன் க. கஜன் அவர்களுக்கு மிருதங்க அரங்கேற்றம் ஆரம்பகுரு என்ற வகையில நானும் பங்கேற்று அதற்குரிய கௌரவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது முத்தரப்பு கோரிக்கை அளவில்லா மகிழ்ச்சியடைந்தேன் சபையின் உயிர்நாடி ந. பரமேஸ்வரன் அவர்களதும், சக அங்கத்தினர்களினதும் விடாமுயற்ச்சியால் இளந் தொண்டர் சபை மண்டபத்தில் 198- ம் ஆண்டில் மிருதங்க இசை வகுப்பில் முதல் மாணாக்கர்களில் ஒருவரான செல்வன் க. கஜன் அவர்கள் மிகுந்த ஊக்கமும், சொல் வனவற்றை இலகுவில் கிரகிக்கும் திறனும் உள்ள மாணாக்கன் எனது வசதியினம் காரணமாக வகுப்பை தொடர்ந்து நடாத்த முடியாமலிருந்தபோது மனமுவந்து வகுப்பை பொறுப்பேற்று தொடர்ந்து நடாத்திக் கொண்டிருக்கும் செல்வன் க. கஜன் அவர்களை ஒரு முழுக்கலைஞனாக உயர்த்திக் கொண்டிருக்கும் மயிலிட்டி திரு. ப சின்னராசா அவர்கள் மிருதங்க கலையில் எனது குருநாதர் அவருக்கு இதயம் கனிந்த பணிவான நன்றிகள். வியாபார நோக்கின்றி ஆத்தம திருப்தியுடன் இசைவகுப்புக்களை நடாத்திக் கொண்டிருக்கும் இளந் தொண்டர் சபையினருக்கும் எனது மனமுவந்த நல்வாழ்த்துக்கள். ஆர்வமுடன் மிருதங்க இசை பயின்று ஒரு முழுக்கலைஞனாக உதயமாகும் செல்வன் க. கஜன் அவர்கட்கு எனது உளம் நிறைந்த நல் ஆசிகள்.

நன்றி

இங்ஙனம்

இராமலிங்கம் - அருணகிரிவாசன்

## கலை வளர்க! கஜன் வாழ்க!

கலை பண்பும் தெய்வீகமும், தமிழ்ப் பண்பாடும் இறை சந்நிதானங்களும் ஒழுங்கே இணைந்து மிளிர்கின்ற இணுவையம்பதியிலே கணபதிப்பிள்ளை தம்பதிகளுக்கு உதித்த தவப்புதல்வனாம் கஜன் அவர்கள் தம்மாணவப் பருவத்திலேயே மிருதங்க இள வித்தகராகி அரங்கேற்ற மேடை ஏறுகின்றார் எனும் நற்செய்தி கேட்டு மகிழ்ச்சி எய்துகின்றேன்.

நந்தி தேவரின் வாத்தியமாம் மிருதங்கத்தை நல்லாசான் வித்வான் திரு க. ப. சின்னராசா அவர்களிடம் குரு சிஷ்ய பாரம்பரியத்திலேயே முறையாகப்பயின்று பள்ளிமாணவர்க்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் இளங்கலைஞர்கட்கு முன்னோடியாகவும் கஜன் இன்று இசையரங்கம் காணுகின்றார் பள்ளிப்படிப்பை மேற்கொண்டு கற்றுவரும் கஜன் இன்று கலை உலகில் சஞ்சரிக்க தனது பாதங்களைப் பதிக்கின்றார். இவர் தொடர்ந்தும் பல்கலைபயின்று மிருதங்க கலையின் சிகரமென மிளிரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

இளங்கலைஞர் கஜன் மிருதங்க கலையுடன் தெய்வீகச் சூழலில் வாழ்கின்ற பேற்றினால் போலும் பண்ணிசைத் துறையிலும் ஆன்மீகப் பண்பையும் பெருக்கிவருகின்றார் தொன்பெரும் பதியாம் இணுவையில் ஸ்ரீ பரராச சேகரப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் பண்ணிசைப் போட்டிகளிலே கடந்த ஈராண்டுகளிலும் முதலாமிடங்களைப் பெற்று தங்கப்பதக்கங்களும் சூடப பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார் அத்துடன் வட இலங்கை சங்கீதசபையினரால் நடாத்தப்பட்டு வரும் பரீட்சைகளில் படிப்படியாகச் சித்தியெய்தி இப்போ தாம் மூன்றுக்கான மிருதங்கப் பரீட்சையிலும் சித்தியெய்தியதுடனமையாது தொடர்ந்தும் தாம் நான்கிற்கான பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டு இருக்கிறார்.

''தாரமும் குருவும் தலைவிதிப்படி'' என்பது ஆண்றோர். வாக்கு அதற்கமைய கஜன் குருவாகப் பெற்ற வித்வான் திரு. க. ப. சின்னராசா அவர்கள் கஜனின் இசைவளர்ச்சி யில் ஆர்வம் கொண்டவர். அத்துடன் தம்மை அனுகும் கலை மாணவர்களை அன்புடன் நெறிப்படுத்தும் பண்பாளர் வித்வான் சின்னராசா அவர்களின் வழிநடத்தலால் வளர்ந்த மாணவர் என்ற வகையில் கஜன் அவர்கள் சங்கீத உலகில் வருங்காலத்தில் இனிதே பிரகாசிப்பார் என்பது திண்ணம் வருங்காலத்தில் கஜன் தன் பிஞ்சுவிரல்களால் தாளலயம் விலகாமல் மிருதங்கத்தை தட்டும்போது எல்லாம் எழப் போகின்ற இன்ப இசையானது இறைவனது உள்ளத்திலேயே தேனூறித் தித்திக்கும் தெய்வீக இசையாக அமையவேண் டுமெனப் பிரார்த்தித்து கஜன் கல்வியாலும் பாண்டித்தியம் பெற்று கல்வியால் உலகையாள வேண்டும் எனவும் வாழ்த்து கிறேன்.

யாழ்ப்பாணம்
15 - 09 - 91

இங்கனம்
இ. சுந்தரலிங்கம்
கல்விப் பணிப்பாளர்
வடமாநிலம்

## திருப்பணந்தாள் ஆதீனப்பண்ணிசைவாணர் இளந்தொண்டர்சபை பண்ணிசை ஆசிரியரின் ஆசியுரை

செல்வன் கணபதிப்பிள்ளை கஜன் அவர்களது மிருதங்க அரங்கேற்றம் 29-9-91 அன்று இணுவில் கந்தசாமி கோவில் இளந் தொண்டர் சபையினரது சைவப் பணி மனையில் நடைபெற உள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகின்றேன் - நந்தியம் பெருமான் வாத்தியமாக விளங்கும் மிருதங்க கலையை ஆர்வத்துடன் கற்று இவ் இளம் ப்ராயத்திலேயே அரங்கேற்றுவது சாலப் பொருத்தமாகும் இணுவை இளந் தொண்டர் சபையினரால் நடாத்தப்பட்டு வரும் முதுபெரும் "மிருதங்க கலாவித்தகர்" திரு. ப. சின்னராசா அவர்களின் வகுப்பில் மிருதங்க கலையை கற்கக் கிடைத்தமை கஜனின் பூர்வ புண்ணியப்பேறு என்றே கூற வேண்டும்.

செல்வன் க. கஜன் அவர்கள் மிருதங்க கலையை மட்டும் கற்பதோடு நின்று விடாமல் இசைக் கலையையும், பண் இசையையும் கற்றுச் சிறந்து விளங்குகிறார். இதற்குச் சான்றாக 1989 ம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக இந்து கலாச்சார அமைச்சினால் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் மாவட்டரீதியில் முதலாம் இடத்தையும். அகில இலங்கைரீதியில் நடைபெற்ற போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்று இணுவையூருக்கே பெருமை தேடிக் கொடுத்ததோடு 1990, 1991 ஆண்டு இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலில் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் 1990 ம் ஆண்டு கீழ்ப்பிரிவில் 1 ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும், இவ் வருடம் நடைபெற்ற போட்டியில் மத்திய பிரிவில் 1 ம் இடத்தைப் பெற்று இன்னுமொரு தங்கப் பதக்கத்தையும் பெற்றுள்ளமை பாராட்டுதற்குரியதாகும் இவரின் பண்ணிசை ஆசிரியர் என்ற முறையில், இவரி

டம் காணப்படும் அன்பு, அடக்கம், இறைபக்தி, குருபக்தி போன்ற சிறந்த குணங்களே இவரின் கலை வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணமாகும் என்பதை நானுணர்வேன் இவரின் மிருதங்க அரங்கேற்றம் இனிது நடைபெற்றுக் கலையுலகில் யாவராலும் பாராட்டப் பெற்றுச் சிறந்து விளங்க எல்லாம் வல்ல. இணுவைக் கந்தன் பாதார விந்தங்களை வேண்டி இறைஞ்சி எனது மனமார்ந்த நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வி. சிவஞானசேகரம்
சங்கீத பூசனம் பண்ணிசை
கோண்டாவில் மேற்கு

# உதவிக் கல்விப் பணிப்பாளரின்

# ஆசியுரை

செல்வன் கணபதிப்பிள்ளை கஜன் அவர்கள் ஆகிய இன்று சங்கீதத்திற்கு பிதா என்று சொல்லப்படுகின்ற லய வாத்தியமான மிருதங்கத்தை பல ரசிகர்கள் முன் அரங் கேற்றுகிறார் என்பது மகிழ்ச்சிக்குரிய காவியம் கலை, கலாச்சாரம், பண்பாடு நிறைந்தபதி இணுவில் பத்தாவது ஆண்டில் பயின்று கொண்டிருக்கும் 15 வயதையுடைய யாழ். சைவமகாஜன வித்தியாலயத்திற்கும் பெருமை தேடித் தரும் இம் மாணவன் மிருதங்க கலாவித்தகரும் பலபாலர்களை தமது அயராத உழைப்பினால் அரங்கேற்றியவருமான, திரு. ப. சின்னராசா அவர்களை குருவாகக் கொண்டுள்ளார் என்பது மிகமிகப் பொருத்தமானதே அமரர் க. சங்கரசிவம் அவர்களும் இவரிடம் கற்று இணுவிலிலேயே அரங்கேற்றம் செய்தவர் என்பதும் இங்கு நாம் நினைவு கூரப்படவேண்டி யதே.

குருபக்தி, பெரியோரைக் கனம் பண்ணல், பணிவு ஆகிய பண்புகள் இசைகலையை கற்பவரிடம் பெரிதும் காணப்படும் என்பதற்கமைய இன்று அரங்கேறும் செல்வன் மென்மேலும் தனது கலையை ஆசிரியர் உதவியோடு வளர்த்தும் பிரகா காசிக்க எல்லாம் வல்ல இணுவில் கந்தக் கடவுள் அருள் புரிய பிரார்த்தித்து வளரும் கலைஞருக்கு எனது நல்வாழ்த் துக்களை வழங்குகிறேன்.

இவரைப் போன்ற பல கலைஞர்கள் அரங்கேற்றி ஊக்கிவித்துவரும் திரு. க. ப. சின்னராசா அவர்களுக்கு கலைஞன் என்ற வகையில் எனது பாராட்டினைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

நன்றே செய்க இன்றே செய்க

சங்கீத பூசணம் கு. கணபதிப்பிள்ளை
உதவிக் கல்விப் பணிப்பாளர் - சங்கீதம்

15. 9. 91
கல்வித்திணைக்களம்
யாழ்ப்பாணம்.

## வயலின் ஆசிரியரின்

# ஆசிச்செய்தி

செல்வன் க கஜன் அவர்களின் அரங்கேற்றம் நிறைவாக அமைய முதற்கண் வாழ்த்துகிறேன் சங்கீதம் என்பது பெரிய சமுத்திரம் இதனை இயங்க வைப்பவை இரண்டு அவை சுருதி, லயம் இதே சுருதியைத் தாயாகவும் லயத்தை தந்தையாகவும் கொண்டது இசை. இந்த இரண்டும்தான் இசையின் முதுகெலும்பாக அமைகின்றன. இவற்றில் வாத்தியமான மிருதங்கத்தை செல்வன் க கஜன் ரசிகர்கள் முன்னிலையிலும் கலைஞர்கள் முன்னிலையிலும் நிகழ்த்தவுள்ளார். அது அவரின் வயதுக்கும், மற்றவர்களுக்கும் முன்மாதிரியாக அமையும் என நம்புகிறேன் இவரின் வாசிப்பில் நல்ல நாதம், லயம் எல்லாம் அமைந்துள்ளன. அத்துடன் வாசிக்கவேனும் என்ற ஆசையும் உண்டு. இவரின் குடும்பங்களும் கலைஞர்களிடம் பண்பு பழக்கம் உடையவர்கள் இவரின் ஆசிரியர் குரு சின்னராசா அவர்களும் கச்சேரிகள் எல்லாம் வாசிப்பவர் நல்ல பண்புடையவர். நல்மாணவர்களை உருவாக்கும் ஆற்றல் உடையவர் மேலும் கஜன் தொடர்ந்து அவரிடம் படித்து நல்ல ஓர் மிருதங்க வித்துவானாக திகழ்வார் என்பது என் நம்பிக்கை எல்லாவற்றிக்கும் மேலாக தொண்டர் சபையின் ஊக்கமும் நிறைய உண்டு. இந்த வளர்ச்சிகள் என்பது பாராட்டுக்குரியது.

இணுவில்<br>யாழ்ப்பாணம்

இளந்தொண்டர்சபை<br>வயிலின் வித்துவான்<br>ஆர். இராதாகிருஸ்ணன்

# ஆசியுரை

எழிசையும் சைவமதம் தமிழும் ஓங்கும்
    எழில்நகராம் இணுவையம்பதியில் என்றும்
வாழியென வாழ்த்திக் கலை வளர்க்கும் தொண்டர்
    வளமான இளந்தொண்டர் சபையென்நேத்தி
சூழியிதயம் மகிழ்ந்திடவே சுந்தரமாய்
    சுகுணகலை வளர்ந்து மிருதங்க இசை
ஆழமுடன் முறையாகப் பயின்ற கஜன்
    அரங்கேற்றம் வாணியருள் பொலிந்துவாழி

மிருதங்க சாஸ்த்திரத்தின் நுனுக்கம் யாவும்
    மேலான தானலய நாதம் ஓங்க
திருபொங்க நல்லிதய சுத்தியோடு
    தினம் கலை பயிலிவிக்கும் குருவுமான
குருசங்க மம்சேரும் சின்னராசா
    குலவு மிருதங்க இசை வித்துவானே
தருஅங்க தானலய நாத சீடன்
    தவழ்கஜன் அரங்கேற்றம் சிறந்துவாழி

"சுபம்"

இயலிசை வாருதி
**பிரம்ம ஸ்ரீ ந. வீரமணிஐயர்**

# இசை அரங்கு

பாட்டு:- சங்கீத பூசணம், வி. சிவஞானசேகரம்
(இசை ஆசிரியர் சென்யோண்ஸ் கல்லூரி)

வயலின்:- வயலின் வித்துவான் ஆர். இராதாகிருஸ்ணன்
(இளந் தொண்டர் சபை வயலின் ஆசிரியர்)

மிருதங்கம்:- செல்வன் கணபதிப்பிள்ளை கஜன்
(இளந் தொண்டர் சபை மாணவன்)

கெஞ்சிரா.- திரு. க. சிதம்பரநாதன்
(மிருதங்க விரிவுரையாளர் இராமநாதன் நுண்கலைப்பீடம்)

## நிகழ்ச்சி நிரல்

| | | | ராகம் | தாளம் |
|---|---|---|---|---|
| 1. | நின்னுக்கோரி | வர்னம் | மோகனம் | ஆதி |
| 2. | வேண்டும் வரம் தருவாய் | கீர்த்தனை | கஜசத்வனி | ஆதி |
| 3. | பரம்தாம வதி | க்ருதி | தர்மவதி | ருபகம் |
| 4. | இணுவைக் கந்தனே | கீர்த்தனை | கீந்தோளம் | ஆதி |
| 5. | அருள் மாரி பொலிகின்ற | கீர்த்தனை | சாரங்கா | கண்டசாபு |
| 6. | பாகாயனையா | க்ருதி | சந்ரஜோதி | ஆதி |
| 7. | வேளைஅறிந்து | பிரதான கீர்த்தனை | கல்யாணி | ஆதி |
| 8. | பச்சைக் குழந்தையடி | பாரதிபாடல் கீர்த்தனை | வலதி | ஆதி திஸ்ரநடை |
| 9. | இராகம் தாளம் பல்லவி | இணுவைபதியில் வதியும் சண்முக | காம்போதி | ஆதி 1½ சியம் |
| 10. | சின்னவயதினிலே | வீரமனி ஐயர் பாடல் சாகித்தியம் | மாண்டு | ஆதி |
| 11. | இணுவைப்பதியில் | திரு. ப. சின்னராசா சாகித்தியம் | இராகமாளிகை | ஆதி |
| 12. | முத்தைத்தரு பத்தி திருநகை | திருப்புகள் | சண்முகப்பிரியா | மிஸ்ரசாபு |
| 13. | மங்களம் | | | |

# ஆசிச் செய்தி

செல்வன் கணபதிப்பிள்ளை கஜன் அவர்கள் இணுவில் இளந் தொண்டர் சபை இசைமன்றத்தில், மிருதங்க வித்துவான் திரு. சின்னராசா அவர்களிடம் பல ஆண்டுகள் மிருதங்கம் பயின்று தனது இசைத்திறமையை, கந்தப் பெருமான் முன்னிலையில் அரங்கேற்றுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன் இசைக்கலைப் பெருமக்கள் பெரும்பான்மையாக வாழும் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் கஜன் அவர்கள் மிகுந்த இசை ஞானம் மிக்கவராக இருப்பார் என்பதில் சந்தேகமில்லை - சமகால நெருக்கடிகளின் மத்தியிலும் தனது இசை ஆர்வத்தினால் மிருதங்க கலையைப் பயின்று சிறிய வயதிலேயே அரங்கேற்றுவதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது மேலும் செல்வன் கஜன் அவர்கள் இக்கலையில் பல சாதனைகளைப் புரிந்து பெரியோர்களின் ஆசிபெற்று தனது இசையினால் இம் மண்ணுக்குச் சேவையாற்றி பேரும் புகழும் பெற்று சிறப்புற வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல இணுவிற்பதி கந்தப் பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.

நன்றி

சங்கீத பூஷனம் சி. பத்மலிங்கம்
"இணைப்பாளர்"
இராமநாதன் நுண்கலைப் பிரிவு
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

# பண்பாடு காக்கும் பணியில்...

''இடக்கண் இனியாய் வலக்கண் குரலாய்
நடப்பது தோலியற் கருவியாகும்''
(சீவகசிந்தாமணி உரையில்)

பலநூற்றாண்டுப் பண்பாட்டுப் பின்னணியை உடையவர்கள் தமிழர்கள் பண்பாட்டுக் குறியீடுகளில் ஒன்று இசை செவிக்கின்பத்தையும், உள்ளத்திற்கு கிளர்ச்சியையும், ஆத்மாவிற்கு அமைதியையும் தருவது இசை, அதற்குத்தாள உறுதியை தருவது ''தண்ணுமை'' எனத் தமிழர் போற்றிய தோற்கருவியான மிருதங்கமாகும். ''கைவிரலின் அசைவில் பிறப்பது தாளம்...'' அத்தாளக் கருவிகளில் தலை சிறந்தது மிருதங்கம்.

அல்லற்பட்டு ஆற்றாது தளரினும் பண்பாட்டைப் விடலாமா? மிருதங்க கலையை மரபுவழி பயிற்றுவித்துப் புகழ் பெற்றவர், ஓய்வு பெற்ற கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மிருதங்க விரிவுரையாளர் திரு. க. ப. சின்னராசா அவர்கள், கலையைக் கட்டிக் காக்கும் கலைஞர் திலகம்.

அவர்களின் சீடர்களில் ஒருவரான கணபதிப்பிள்ளை 'அக்ஷை' இணுவில் மேற்கு இணுவில் அவர்களின் பதினைந்து வயது செல்வப் புதல்வன் கஜன் முறையான பயிற்சிபெற்று அரங்கு காணும் நற்பேறு பெற்றுள்ளான் தமிழர் தன் பண்பாடு காக்கும் பணிக்கு பங்களிக்க முன் வந்துள்ள கஜனுக்கு அவன் முயற்சிக்கு இறையருள் துணை புரிவதாக.

''கைவிரலின் அசைவில் பிறப்பது தாளம்''
''அங்கங்களின் அசைவில் பிறப்பது நடனம்''
''உதட்டு அசைவில் பிறப்பது சங்கீதம்''

இங்ஙனம்
க. குலேந்திரன்
''கங்கை''
சங்கானை. இசைப்பயிற்சி நிலையம்

க. குலேந்திரன்
அராலி, வீதி
சங்கானை

# இசைத்துறை வாழ்த்துகிறது

எமது இளந்தொண்டர் சபை இறைதொண்டின் பலமே துணையாக, பரிசில்கள், தங்கப்பதக்கங்கள் பெறும் பண்ணிசையாளர்களை, பேச்சாளர்களை உருவாக்கிவரும் அதேவேளை, நடன, சங்கீத, வயலினிசை, மிருதங்க வகுப்புகளையும் நடத்தி வருகிறது. இப்பணியில் வடஇலங்கைச் சங்கீத சபையின் பரீட்சைகளில் வெற்றிபெற்ற நூற்றுக் கணக்கான எம்மாணவர்களில் ஒருவன் செல்வன் க. கஜன் 29. 9. 91 இல் மிருதங்க அரங்கேற்றம் காண்கின்றார்.

சபையின் மிருதங்க வகுப்பு ஆசிரியராய் விளங்கிச் செல்வன் கஜனுக்குக் கைகொடுத்துக் கலைத்துறையில் 'கரை சேர்க்கும்' ஆசான் க. ப சின்னராசா அவர்களுக்கும், இவ்வரங்கேற்றத்தில் பங்களிக்கும் இசைக் கலைஞர்களாகிய லயஞான திலகம் R. இராதாகிருஷ்ணன், பண்ணிசைச் செம்மல் சிவஞான சேகரம் ஆகிய சபைக்கலை வகுப்புகளின் ஆசிரியர்களுக்கும். யாழ் இராமநாதன் நுண்கலைக் கழக விரிவுரையாளர் திரு சிதம்பரநாதன் அவர்களுக்கும் எம் சபையின் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

ஊர்ப்பெருமை, சபைப்பெருமை, கலைப்பெருமை விளங்க அரங்கேறும் செல்வன் க. கஜனுக்கு எமது இறும்பூது எய்தும் இதயங்களின் வாழ்த்துக்களைக் கூறுகின்றோம்.

வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்க் கலைகள்!

இசைத்துறை
இளந்தொண்டர் சபை
இணுவில் கந்தசுவாமி கோவில்

# குருவணக்கம்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நான் இவ்விசைத்துறையில் மிருதங்கக்கலையில் மேன்மை பெற்று ஓங்க வழிவகுத்தவர் எனது குருநாதர் திரு. க. ப. சின்னராசா அவர்கள் ஆவர்.

மூன்றாம் வகுப்பில் நான் இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை மிருதங்க வகுப்பில் இக்கலையைக் கற்பதற்குத் தொடங்கிய வேளையில் எனக்கு வழிகாட்டியவர் எனது குருநாதரின் மாணவர் அருணகிரிவாசன் ஆசிரியர் அவர்கள். அவரைத் தொடர்ந்து எனது குருநாதர் இக்கலையில் நான் துரிதமான தேர்ச்சிபெற வழிகாட்டியாக, உந்து சக்தியாக, உறுதுணையாக நின்றார்.

குருநாதர் எனது முன்னேற்றத்தில் விசேட அக்கறை காட்டும் பேற்றினை நான் பெறவாய்த்தது என்பூர்வ புண்ணியப் பேறாகும்.

அவர் தமது அதீத கலைஞானத்தையும் பொன்னான சக்தியையும், ஆசீர்வாதத்தையும் எனக்கு நெஞ்சார வழங்குவதை உணர்ந்தபோது என்கலை ஆர்வம் அற்புதமாக மிளிரத்தொடங்கி விட்டது.

இவர் வகுப்பில் எந்நேரமும் களையாத மனத்துடனும் முகமலர்ச்சியுடனும் முழுமையாகத் தமது கலையானத்தைத் எங்கள் வளர்ச்சிக்கு அர்ப்பணித்தார். இது இவரது மேலான சுபாவமாயுள்ளது.

வடஇலங்கை சங்கீத சபையில் நான் நல்ல பெறுபேறு பெறுவதற்கும் உதவியவர் என்குருநாதரே.

இவரது மலர்ந்தமுகம், கனிந்த பார்வை, நாதம் பேசும் [illegible]ரல்கள் என்றென்றும் ஒளிவீசிப் பிரகாசிக்க இவர்தம் சீடர்களை மேலும் ஒளிபெறவைக்க அருள்புரிய எங்கள் இணுவை முருகன் பாதாரவிந்தங்களை பிரார்த்திக்கிறேன்.

எனது அரங்கேற்றத்திற்கு சம்மதித்து முழுமனத்துடன் என்னை ஆசீர்வதித்துச் சிரமம் பல ஏற்றுள்ள எனது குருநாதரிற்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் சிரம் தாழ்த்தித் தெரிவித்துக் கொள்கின்றேன் மேலும் இவ்வரங்கேற்ற முயற்சியில் பங்கேற்றுழைக்கும் கலைப்பெருமக்களான வயலின் வித்துவான் R. இராதாகிருஷ்ணன், எனது பண்ணிசைக்குரு சங்கீதபூஷனம் வி. சிவஞானசேகரம் அவர்களுக்கும் மிருதங்க வித்துவான் M. சிதம்பரநாதன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

ஆதியிலிருந்து இன்றுவரை இளந்தொண்டர் சபையின் கலை வகுப்புகளை வெற்றிகரமாக நடாத்திவரும் என் வழிகாட்டி திரு மா. ந. பரமேஸ்வரன் அவர்களுட்பட்ட சபையுறுப்பினர்களுக்கும் சகமாணவர்களின் சார்பிலும் என் சார்பிலும் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளேன்.

சுபம்

இங்ஙனம்

க. கஜன்



அருளாசி

சீரார் மிருதங்கச் செல்வன் கஜன் என்னும்
தாளாரும் ஞானத் தவப்புதல்வன் - பேராரும்
நந்திபோல் நாரணன் போல் நாதலயச் செல்வ மிக
செந்தமிழ் போல் வாழ்க சிறந்து.

— சுபம் —

நாகேஸ்வரம்
அளவெட்டி.

அருட்கவி
சி. வினாசித்தம்பி

அருண் பிறிண்டேர்ஸ் அன் பப்பிளிசேர்ஸ்